රාජ්‍ය ගිණුම් දෙපාර්තමේන්තුව

அரச கணக்குகள் திணைக்களம்

**Department of State Accounts**

මගේ අංකය / எனது இல. / My No. } SA/AS/CMA/C'CULAR

ඔබේ අංකය / உமது இல. / Your No. }

දිනය / திகதி / Date } 2012.11.26


**அரச கணக்குகள் சுற்றறிக்கை இலக்கம்: 227/2012**

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் மற்றும்
மாவட்டச் செயலாளர்கள் அனைவருக்கும்.

ஐயா/அம்மணி,

**ஒதுக்கீட்டுக் கணக்கு – 2012**

அமைச்சுக்களின் செயலாளர்கள்/ திணைக்களங்கள்/ மாவட்டச் செயலகங்களின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நிதிப் பிரமானம் 150 இன் பிரகாரம் தமது செலவினத் தலைப்புகளுடன் தொடர்புடைய 2012 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டு கணக்கு பின்வரும் அறிவுறுத்தல்களின் பிரகாரம் தயாரித்து கைச்சாத்திட்டு 2013 மார்ச் மாதம் 31 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்குமாறு பணிவுடன் அறியத்தருகிறேன்.

2. **கணக்கினைத் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் மொழி**

சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தியில் அறிமுகப்படுத்தியுள்ள மாதிரியினைப் பயன்படுத்தி A4 அளவிலான தாளில் 2012 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் தனித்தனியாக தயாரிக்கப்படல் வேண்டும்.

3. **கணக்கினைத் தயாரிப்பதற்குத் தேவையான புள்ளிவிபரத் தரவுகள்**

2012.10.31 ஆம் திகதிய இலக்கம் 226/2012 அரச கணக்குகள் சுற்றறிக்கையின் இலக்கம் 3.10 ஆம் பந்தியின் பிரகாரம் இத்திணைக்களத்தினால் வெளியிடப்படுகின்ற 2012 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்கு அறிக்கைகள் மற்றும் அதனுடன் இணைத்து சமர்ப்பிக்கப்படுகின்ற அட்டவணைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள புள்ளிவிபரங்களை அடிப்படையாகக் கொண்டு, பின்வரும் வழிகாட்டல்களுக்கு ஏற்ப ஒதுக்கீட்டுக் கணக்கினைத் தயாரித்தல் வேண்டும்.

3.1 அதன் பிரகாரம் 2012 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்கறிக்கை மற்றும் அதனுடன் இணைத்துள்ள அட்டவணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பீட்டுகள், மொத்தத் தேறிய ஏற்பாடுகள், மொத்த செலவினம் மற்றும் தேறிய பெறுபேறு (மீதி மற்றும் மிகை) பற்றிய தகவல்கள், அமைச்சின்/ திணைக்களத்தின் செலவினத் தலைப்பின் ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டத்துடனும் தொடர்புடையதாக சமர்ப்பிக்கப்படுகின்ற 2012 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளிவிபரத் தகவல்களுடன் இணங்குதல் வேண்டும்.




මහ භාණ්ඩාගාරය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව பொது திறைசேரி, கொழும்பு 01, இலங்கை. General Treasury, Colombo 01, Sri Lanka. General - Tel.: +94 112 484600 Website: www.sad.gov.lk
Director General - Tel.: +94 112 484728 Fax: +94 112 473856 e-mail: dgsa@sad.treasury.gov.lk Additional Director General - Tel.: +94 112 484898
Director (Accounting & Reporting): +94 112 484747 Director (Accounting Services): +94 112 484753 Director (Systems & Training): +94 112 484733

3.2 ஒதுக்கீட்டுக் கணக்கினைத் தயாரிக்கும் போது மொத்தச் செலவினம், மீதி/மிகை என்பவற்றினை கிட்டிய ரூபாவில் குறிப்பிடுதல் வேண்டும்.

3.3 நி.பி. 66 மற்றும் நி.பி. 69 மாற்றல்கள் தொடர்பில் 2012 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்கறிக்கைகளில் மொத்த பெறுமதி மாத்திரமே குறிப்பிடப்பட்டுள்ளன. அந்த மொத்தப் பெறுமதிக்குரிய ஒவ்வொரு நி.பி. 66 மற்றும் நி.பி. 69 மாற்றல்கள் தொடர்பான முழு விபரமடங்கிய கூற்று ஒன்றினையும் மேற்படி கூற்றுடன் அனுப்புவதுடன், ஒதுக்கீட்டுக் கணக்கினை தயாரிப்பதற்கு முன்னர் அதில் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளிவிபரப் பெறுமதிகளை உரிய மாற்றல் பத்திரங்களின் பிரதிகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தல் வேண்டும்.

3.4 கடந்த ஆண்டுகளின் ஒதுக்கீட்டுக் கணக்குகளுடன் தொடர்புடைய கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களை பரீட்சித்துப் பார்க்கும் போது பொதுவாகக் காணக் கூடியதாக இருந்த பிழைகளாக இறுதி திறைசேரி அச்சீட்டுக் குறிப்புக்களை பயன்படுத்தி ஒதுக்கீட்டுக் கணக்கினை தயாரிக்காமை, கொடுக்கல் வாங்கல்களை கிட்டிய ரூபாவிற்கு அறிக்கையிடல், தாமதமாக கணக்குகளை சமர்ப்பித்தல், பூரணமற்ற பொறுப்புக்கள் பற்றிய அறிக்கைகளை சமர்ப்பித்தல், உரியவாறு பொருள் கணக்கெடுப்புப் பணிகளை பூர்த்தி செய்யாமை என்பவற்றினைக் குறிப்பிட முடியும். அதனால் இவ்வாறு தவிர்த்துக் கொள்ளக் கூடிய குறைப்பாடுகள் ஏற்படாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பணிவுடன் அறியத்தருகிறேன்.

3.5 தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 155 இன் பிரகாரம் அரச செலவின முகாமைத்துவம் பற்றி கவனம் செலுத்தியதன் பின்னர் தயாரிக்கப்பட்ட திருத்தம் செய்யப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் பிரகாரம் நிறுத்தி வைக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் உங்களது செலவினப் பேரேட்டிலே செலவுகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளல் வேண்டும். அடிப்படை வரவு செலவுத் திட்ட புள்ளிவிபரங்களை அடிப்படையாகக் கொண்டே திறைசேரியின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்படுகின்றன. அதனால் இங்கு செலவினத் தலைப்புக்களின் மீதிகளுக்கான காரணங்களை தெளிவுபடுத்திக்கொண்டு டீ.ஜீ.எஸ்.ஏ. 6, 6(i) என்பவற்றின் குறித்த மீதிகளுக்கு மேற்படி நிறுத்தி வைத்தல்களையும் காரணமாகக் குறிப்பிடுதல் வேண்டும். மேலும், ஏனைய மீதிகளுக்காகவும் உரியவாறு காரணங்களைத் தெளிவுபடுத்தல் வேண்டும்.

**4. கணக்குகளைத் தயாரிப்பதற்குத் தேவையான மாதிரிகள்**

இதனுடன் இணைக்கப்பட்டுள்ள பின்வரும் படிவங்களின் மாதிரிகளை ஒதுக்கீட்டுக் கணக்குகளைத் தயாரிப்பதற்காக பயன்படுத்துதல் வேண்டும்.

டீ.ஜீ.எஸ்.ஏ. 1 - ஒதுக்கீட்டுக் கணக்கு – 2012

டீ.ஜீ.எஸ்.ஏ. 2 - நிகழ்ச்சித் திட்ட வாரியாக ஒதுக்கீட்டுக் கணக்கு – 2012
(ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டத்திற்காகவும் ஒதுக்கீட்டுக் கணக்கினை தயாரித்தல் வேண்டும்.)

டீ.ஜீ.எஸ்.ஏ. 3 - கருத்திட்ட வாரியாக மீண்டுவரும் செலவினம்.
(ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டத்திற்காகவும் தயாரித்தல் வேண்டும்.)

| | | |
|---|---|---|
| டீ.ஜீ.எஸ்.ஏ. 4 | - | கருத்திட்ட வாரியாக மூலதனச் செலவினம். (ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டத்திற்காகவும் தயாரித்தல் வேண்டும்.) |
| டீ.ஜீ.எஸ்.ஏ. 5 | - | நிகழ்ச்சித் திட்ட வாரியாக செலவின நிதியீட்டுச் சுருக்கம். (டீ.ஜீ.எஸ்.ஏ. 5(i) இன் சுருக்கத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தயாரித்தல் வேண்டும். |
| டீ.ஜீ.எஸ்.ஏ. 6 | - | மீண்டுவரும் செலவினத்தின் மொத்தத் தேறிய ஏற்பாடுகள் மற்றும் உண்மைச் செலவினத்திற்கு இடையிலான வித்தியாசம் |
| டீ.ஜீ.எஸ்.ஏ. 6(i) | - | மூலதனச் செலவினத்தின் மொத்தத் தேறிய ஏற்பாடுகள் மற்றும் உண்மைச் செலவினத்திற்கு இடையிலான மாற்றத்தினை தெளிவுபடுத்தல். |
| டீ.ஜீ.எஸ்.ஏ. 7 | - | நட்டம் மற்றும் கைவிடல் பற்றிய கூற்று (ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டத்திற்காகவும் தயாரித்தல் வேண்டும்.) |
| டீ.ஜீ.எஸ்.ஏ. 7(i) | - | புத்தகங்களில் இருந்து பதிவளித்தல் பற்றிய கூற்று (ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டத்திற்காகவும் தயாரித்தல் வேண்டும்.) |
| டீ.ஜீ.எஸ்.ஏ. 8 | - | பொறுப்புக்கள் பற்றிய கூற்று - (i) திறைசேரியின் அனுமதியினைப் பெற்றுள்ள வைப்புக் கணக்கிற்கு மாற்றிய பணம் தவிர்ந்த (ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டத்திற்காகவும் தயாரித்தல் வேண்டும்.) |
| டீ.ஜீ.எஸ்.ஏ. 8(i) | - | பொறுப்புக்கள் பற்றிய கூற்று - (ii) நி.பி. 215(3) (ஆ) மற்றும் (இ) இன் பிரகாரம் திறைசேரியின் அனுமதியுடன் வைப்புக் கணக்கிற்கு மாற்றிய ஏற்பாடுகள் (ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டத்திற்காகவும் தயாரித்தல் வேண்டும்.) |
| டீ.ஜீ.எஸ்.ஏ. 8(ii) | - | பொறுப்புக்கள் பற்றிய கூற்று - (iii) நி.பி. 94(2) மற்றும் (3) இன் பிரகாரம் உடன்பட்ட பொறுப்புக்கள் பற்றிய கூற்று |
| டீ.ஜீ.எஸ்.ஏ. 9 | - | மீள்நிரப்பத்தக்க வெளிநாட்டு உதவிகளுடன் தொடர்புடைய உரிமைகள் பற்றிய கூற்று (ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டத்திற்காகவும் தயாரித்தல் வேண்டும்.) |
| டீ.ஜீ.எஸ்.ஏ. 10 | - | காணாமற்போன பற்றுச் சீட்டுக்கள் பற்றிய கூற்று (ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டத்திற்காகவும் தயாரித்தல் வேண்டும்.) |
| குறிப்பு i | - | நடைமுறையல்லா சொத்துக்களின் அசைவு பற்றிய அறிக்கை – 2012 |
| குறிப்பு ii | - | முற்பணக் கணக்கு மற்றும் வைப்புக் கணக்கு என்பவற்றிற்கான கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பொழிப்பு |
| குறிப்பு iii | - | முற்பணக் கணக்கு பற்றிய பொழிப்பு அறிக்கை – 2012 |
| குறிப்பு (iv) – (அ), (ஆ) | - | வங்கிக் கணக்குகள் பற்றிய தர அறிக்கை |
| டீ.ஜீ.எஸ்.ஏ. (கணக்காய்வு) | - | ஒதுக்கீட்டுக் கணக்கிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்கள் |

5. **மொத்தத் தேறிய ஏற்பாடுகள் மற்றும் செலவின மாற்றம் தொடர்பான தெளிவுபடுத்தல்.**

ஒவ்வொரு செலவினக் குறியீடுகளின் கீழ் சகல செலவினத் தலைப்புக்களுக்கும் மொத்தத் தேறிய ஏற்பாடுகள் மற்றும் உண்மைச் செலவினத்திற்கு இடையிலான வித்தியாசத்திற்கான காரணம் (டீ.ஜீ.எஸ்.ஏ. 6 மற்றும் 6(i) இல் காட்டுதல் வேண்டும். இவ்வித்தியாசத்தை செலவினத் தலைப்பின் தேறிய ஏற்பாடுகளின் 5 வீதம் அல்லது ரூ.10,000/- ஆகிய இரண்டில் யாதேனுமொரு கூடிய தொகையிலும் பார்க்க குறைவாகக் காணப்படுமாயின், வித்தியாசத்திகான காரணத்தை சமர்ப்பிக்க வேண்டிய தேவையில்லை. மாற்றத்திற்கான காரணங்களைக் குறிப்பிடுகையில் அக்காரணங்கள் சுருக்கமாகவும் அதனை நியாயப்படுத்துவதற்கான காரணங்களை உள்ளடக்கும் வகையிலும் மற்றும் தற்போது பதிலளிக்கப்பட்டுள்ள கணக்காய்வு விசாரணையுடன் தொடர்புபடுமாயின் அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு ஏற்ப தயாரித்தல் வேண்டும்.

6. **ஒதுக்கீட்டுக் கணக்கினைச் சமர்ப்பித்தல்**

ஒவ்வொரு அமைச்சு/ திணைக்களம்/ மாவட்டச் செயலகம் என்பவற்றிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கினை பின்வரும் விடயங்களை உள்ளடக்கி ஆகக் குறைந்த செலவினத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட பொறுப்பு தொகுதி ஒன்றாக சமர்ப்பிக்க வேண்டியமை கட்டாயமானதாகும்.

6.1 ஒதுக்கீட்டுக் கணக்கை டீ.ஜீ.எஸ்.ஏ.1 படிவத்தில் தயாரித்து உரியவாறு உறுதிப்படுத்தல் வேண்டும். அதன் போது கணக்கின் மூலம் சமர்ப்பிக்க வேண்டிய பூரண விபரமடங்கிய தகவல்கள் அனைத்தையும் டீ.ஜீ.எஸ்.ஏ.2 முதல் டீ.ஜீ.எஸ்.ஏ.10 வரையிலான படிவங்களின் மூலம் மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவினங்களைத் தனித்தனியாக தேவையான வகைப்படுத்தல்களுடன், தயாரித்தல் வேண்டும். இந்த அனைத்து கணக்குக் கூற்றுக்களும் ஒதுக்கீட்டுக் கணக்கின் உள்ளடக்கப் பகுதிகளாகக் கருதப்படவதனால் நி.பி. 150 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சரியான மற்றும் போதிய விளக்கமளித்தல்களை வழங்கி 2012 ஒதுக்கீட்டுக் கணக்குகளைத் தயாரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அந்தந்த அமைச்சுக்கள்/ திணைக்களங்கள்/ மாவட்டச் செயலகங்களின் தலைவர்களான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களிடம்/ கணக்கீட்டு உத்தியோகத்தர்களிடம் வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது.

6.2 டீ.ஜீ.எஸ்.ஏ.2 முதல் டீ.ஜீ.எஸ்.ஏ.10 வரையிலான படிவங்களுக்கு மேலதிகமாக, ஒதுக்கீட்டுக் கணக்கிற்கான குறிப்புக்கள் (i) முதல் (iv) வரையிலான விபரங்களையும் உள்ளடக்குதல் வேண்டும். குறிப்பு இலக்கம் (i), (ii) மற்றும் (iii) என்பவற்றில் உள்ளடக்குகின்ற புள்ளிவிபரத் தகவல்களை திறைசேரியின் இறுதிக் கணக்குக் கூற்றுக்களில் குறிப்பிடப்படுகின்ற தரவுகளுடன் இணக்கம் காணப்படல் வேண்டும். மேற்படி சகல படிவங்களையும் உரிய முறையில் பூர்த்தி செய்து பிரதம கணக்காளர்/ பணிப்பாளர் (நிதி)/ ஆணையாளர் (நிதி) ஊடாக சரியானதென உறுதிப்படுத்தி சமர்ப்பித்தல் வேண்டும். மாதிரிப் படிவங்களில் குறிப்பிடுவதற்கு ஏதும் இல்லையெனில் உறுதிப்படுத்திய "வெற்று" ஆவணம் ஒன்றினை சமர்ப்பித்தல் வேண்டும்.

6.3 ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் பிரகாரம் வேறு செலவினத் தலைப்புகளுக்கு மேலதிக ஏற்பாடுகளை வழங்குவதற்காக தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்திற்கு ஒதுக்கியுள்ள எதிர்பாராத சேவைகள் செலவினத் தலைப்புக்களின் கீழான ஏற்பாடுகள் பற்றிய தகவல்களை உள்ளடக்கக் கூடியவாறு தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்திற்கு மாத்திரம் டீ.ஜீ.எஸ்.ஏ.11, முதல் டீ.ஜீ.எஸ்.ஏ.11(i), டீ.ஜீ.எஸ்.ஏ.11(ii) மற்றும் டீ.ஜீ.எஸ்.ஏ.11(iii) வரையான படிவங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

6.4 ஒதுக்கீட்டுக் கணக்கின் 4 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள படிவங்களை ஒழுங்கு முறைப்படி தயாரித்து பொறுப்பு தொகுதியொன்றாக சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கும் போது அதன் அட்டை மற்றும் மேற்படி படிவத்தின் ஒழுங்கு முறைப்படி பக்க இலக்கங்களை உள்ளடக்குதல் வேண்டும். மேலும் கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்களுக்காக டீ.ஜீ.எஸ்.ஏ. (கணக்காய்வு) படிவத்தை தொகுதியின் இறுதியில் உள்ளடக்குதல் வேண்டும்.

6.5 ஒதுக்கீட்டுக் கணக்கின் டீ.ஜீ.எஸ்.ஏ.1 படிவத்தின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்கை மாத்திரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தல் வேண்டும். முழு விபரமடங்கி கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் தொடர்பில் ஒப்பமிட்டுள்ள அனைவரும் பொறுப்புக் கூறல் வேண்டும். மேலும் ஒப்பமிட்டுள்ளவர்கள் முதலெழுத்துக்களுடன் பெயர் மற்றும் பதவிப் பெயர் என்பவற்றினை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

## 7. ஒதுக்கீட்டுக் கணக்கின் மாதிரிகள்

டீ.ஜீ.எஸ்.ஏ. 1 முதல் 11 வரையிலான படிவங்கள் மற்றும் (i) – (iv) வரையிலான குறிப்புக்களின் மாதிரிகள் அரச கணக்குகள் திணைக்களத்தின் http/www.treasury.gov.lk இணைய தளத்தின் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும். தேவையாயின் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளரிடம் (கணக்குச் சேவைகள்) தொடர்பு கொண்டு மென் பிரதியொன்றினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

8. கணக்காய்வாளர் நாயகத்திடம் கணக்குகளைச் சமர்ப்பித்தல்.

கணக்காய்வாளர் நாயகத்திடம் ஒதுக்கீட்டுக் கணக்குகளைத் தயாரிக்கும் போது பின்வரும் படிமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

I. உரியவாறு உறுதிப்படுத்தியதன் பின்னர் ஒதுக்கீட்டுக் கணக்கின் மூலப் பிரதி மற்றும் மேலும் இரண்டு பிரதிகளை, 2013 மார்ச் மாதம் 31 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

II. கணக்காய்வு செய்யப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கினை கணக்காய்வாளர் நாயகத்தினால் பின்வருமாறு பெற்றுக் கொடுக்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| (i) | மூலப் பிரதி | - | அரச கணக்குகள் திணைக்களம் |
| (ii) | இரண்டாம் பிரதி | - | செலவினத் தலைப்பிற்குச் சொந்தமான அமைச்சிற்கு/ திணைக்களத்திற்கு/ மாவட்டச் செயலகத்திற்கு |
| (iii) | மூன்றாம் பிரதி | - | கணக்காய்வாளர் நாயகம் திணைக்களத்தில் வைப்பதற்கு |

III. ஒதுக்கீட்டுக் கணக்கை கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கும் போது அச்சமயத்தில் டீ.ஜீ.எஸ்.ஏ.8, 8(i) மற்றும் 8(ii) குறிப்புக்களில் தனித்தனியான அச்சீட்டுப் பிரதிகளை அரச கணக்குகள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளரிடம் (கணக்கு சேவைகள்) 2013 பெப்ரவரி மாதம் 08 ஆம் திகதிக்கு முன்னரும், மீதமுள்ள இலக்கம் 8(i) முதல் (iv) வரையிலான குறிப்புக்கள் மற்றும் டீ.ஜீ.எஸ்.ஏ.7, 7(i) மற்றும் 8 படிவங்களில் தனித்தனியான பிரதிகளை பொது திறைசேரியின் கீழ் மாடியில் அமைந்துள்ள அரசாங்க கணக்காய்வு துணை அலுவலகத்தின் கணக்காய்வு அத்தியட்சகரிடம் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதனையும் கவனத்திற் கொள்ளவும்.

இது தொடர்பாக மேலதிக தகவல்கள் தேவைப்படுமாயின் இத்திணைக்களத்தின் பணிப்பாளர் - கணக்கு சேவைகள் (தொலைபேசி இலக்கம் 0112484753) அல்லது பிரதிப் பணிப்பாளர் - கணக்கு சேவைகள் (தொலைபேசி இலக்கம் 0112484737) உடன் தொடர்பு கொள்ளவும்.

**என்.பீ. தயாரத்ன**
அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகம்
திறைசேரியின் பிரதிச் செயலாளருக்காக

பிரதிகள் - கணக்காய்வாளர் நாயகம்

# ஒதுக்கீட்டுக் கணக்கு - 2012

செலவினத் தலைப்பு இல.: அமைச்சு / திணைக்களம் / மாவட்டச் செயலகம் :

| வருடாந்த மதிப்பீட்டில் கொடுக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்ட இல.: | வரவு செலவு மதிப்பீட்டில் கொடுக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டத் தலைப்பு | (1) வரவு செலவு மதிப்பீட்டில் உள்ள ஏற்பாடு | (2) குறை நிரப்பு ஏற்பாடும் குறை நிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கமும் | (3) நி.பி.66 மற்றும் நி.பி.69 க்கு ஏற்ப மாற்றங்கள் | (4) மொத்த தேறிய ஏற்பாடு **(1+2+3)** | (5) மொத்தச் செலவினம் | (6) தேறிய விளைவு சேமிப்பு/மிகை (4-5) | பக்க இல.(டிஜிஎஸ்ஏ 2 படிவத்திற்கு தொடர்புடைய குறிப்பு) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | |
| | மீண்டுவரும் | | | | | | | |
| XXX | | | | | | | | |
| XXX | | | | | | | | |
| XXX | | | | | | | | |
| XXX | | | | | | | | |
| | உபமொத்தம் (மீண்டுவரும்) | | | | | | | |
| XXX | மூலதனம் | | | | | | | |
| XXX | | | | | | | | |
| XXX | | | | | | | | |
| XXX | | | | | | | | |
| | உபமொத்தம் (மூலதனம்) | | | | | | | |
| | மொத்தக் கூட்டுத்தொகை | | | | | | | |

இந்த ஒதுக்கீட்டுக் கணக்கின் இணைந்த பகுதியாக விபரமான நிகழ்ச்சித் திட்ட ஒதுக்கீட்டுக் கணக்குகளும் ஏனைய விபரமான கணக்கீட்டுக் கூற்றுக்களும் டிஜிஎஸ்ஏ 02 முதல் 10 வரையிலான படிவத்தில் பக்கம் ...... முதல் ......வரையிலும் ஏனைய குறப்புக்கள் பக்கம் .... முதல் ...வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கணக்கிலுள்ள இலக்கத் தொகைகள், ஏனைய விபரமான கூற்றுக்கள் மற்றும் குறிப்புக்கள் யாவும் சரியானவை என்றும், தொடர்புடைய கணக்குகள் திறைசேரி கணக்குப் புத்தகங்களுடன் கணக்கிணக்கம் செய்யப்பட்டுள்ளதுடன் சரியாகவும் காணப்படுகிறது என இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

பிரதானகணக்காளர/பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
பெயர்:
திகதி :

கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்:
பதவி:
திகதி:

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்:
பதவி:
திகதி :

# நிகழ்ச்சித்திட்ட ரீதியான ஒதுக்கீட்டுக் கணக்கு - 2012

செலவினத் தலைப்பு இல.: அமைச்சு / திணைக்களம் / மாவட்டச் செயலகம் :

நிகழ்ச்சித்திட்ட இலக்கமும் தலைப்பும்:

## மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவினத்தின் பொழிப்பு

| டிஜிஎஸ்ஏ படிவத்தில் குறிப்பிட்ட செலவினத்தின் தன்மை | (1) வருடாந்த மதிப்பீட்டில் உள்ள ஒதுக்கீடு | (2) குறை நிரப்பு ஏற்பாடும் குறை நிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கமும் | (3) நி.பி.66 மற்றும் நி.பி.69 க்கு ஏற்ப மாற்றங்கள் | (4) மொத்த தேறிய ஏற்பாடு (1+2+3) | (5) மொத்தச் செலவினம் | (6) தேறிய விளைவு சேமிப்பு/மிகை (4-5) | பக்க இல.(டிஜிஎஸ்ஏ படிவத்திற்கு தொடர்புடைய குறிப்பு) |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | | ரூபா | |
| (அ) மீண்டுவரும் (டிஜிஎஸ்ஏ3) | | | | | | | |
| (ஆ) மூலதனம் (டிஜிஎஸ்ஏ4) | | | | | | | |
| மொத்தம் | | | | | | | |

பிரதானகணக்காளர்/பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)

திகதி :

# கருத்திட்ட ரீதியான மீண்டுவரும் செலவினம்

செலவினத் தலைப்பு இல.: அமைச்சு / திணைக்களம் / மாவட்டச் செயலகம் :

நிகழ்ச்சித்திட்ட இலக்கமும் தலைப்பும்:

| கருத்திட்ட இல. தலைப்பு மற்றும் வேதனாதிகள், அனைத்து கருத்திட்டங்களுக்குமான ஏனைய செலவினங்கள் | வருடாந்த மதிப்பீட்டில் உள்ள ஒதுக்கீடு | குறை நிரப்பு ஏற்பாடும் குறை நிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கமும் | நி.பி.66 மற்றும் நி.பி.69 க்கு ஏற்ப மாற்றங்கள் | மொத்த தேறிய ஏற்பாடு (1+2+3) | மொத்தச் செலவினம் | தேறிய விளைவு சேமிப்பு/மிகை (4-5) |
|---|---|---|---|---|---|---|
| | (1) | (2) | (3) | (4) | (5) | |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கருத்திட்ட இல...& தலைப்பு.... | | | | | | |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | | | | | | |
| ஏனைய கட்டணங்கள் | | | | | | |
| உப மொத்தம் | | | | | | |
| கருத்திட்ட இல...&தலைப்பு... | | | | | | |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | | | | | | |
| ஏனைய கட்டணங்கள் | | | | | | |
| உப மொத்தம் | | | | | | |
| மொத்தத் தொகை | | | | | | |

பிரதானகணக்காளர்/பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)

திகதி :

# கருத்திட்ட ரீதியான மூலதனச் செலவினம்

செலவினத் தலைப்பு இல: அமைச்சு / திணைக்களம் / மாவட்டச் செயலகம் :

நிகழ்ச்சித்திட்ட இலக்கமும் தலைப்பும்:

கருத்திட்ட இலக்கமும் தலைப்பும்

| விடயக் குறியீடு | விடய இல. | நிதிப்படுத்தல் (குறியீடு) | விடயங்கள் சம்பந்தமான விபரம் | வருடாந்த மதிப்பீட்டில் உள்ள ஏற்பாடு | நி.பி. 66, நி.பி. 69 மாற்றங்கள், குறை நிரப்ப ஏற்பாடு மற்றும் குறை நிரப்பு ஒதுக்கீடு | மொத்த தேறிய ஏற்பாடு (1+2) | மொத்தச் செலவீனம் | தேறிய விளைவு சேமிப்பு/மிகை (4-5) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| | | | | | | | | |
| | | | மொத்தம் | | | | | |

பிரதானகணக்காளர்/பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)

திகதி :

# நிகழ்ச்சிதிட்ட ரீதியாக செலவினத்தை நிதிப்படுத்துதலின் பொழிப்பு

அமைச்சு / திணைக்களம் / மாவட்டச் செயலகம் :
செலவினத் தலைப்பு இல:

| நிதிப்படுத்தல். | | நிகழ்ச்சித்திட்டம் 01* | | நிகழ்ச்சித்திட்டம் 02* | | மொத்தம் | | செலவின வீதம்*** |
|---|---|---|---|---|---|---|---|---|
| குறியீடு | மூலம் | தேறிய ஏற்பாடு** | உண்மைச் செலவினம் | தேறிய ஏற்பாடு** | உண்மைச் செலவினம் | தேறிய ஏற்பாடு | உண்மைச் செலவினம் | |
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | % |
| 11 | உள்நாட்டு நிதி | | | | | | | |
| 12 | வெளிநாட்டுதவி - கடன் | | | | | | | |
| 13 | வெளிநாட்டுதவி - மானியம் | | | | | | | |
| 14 | மீள் செலுத்தவேண்டிய வெளிநாட்டுதவி - கடன் | | | | | | | |
| 15 | மீள் செலுத்தவேண்டிய வெளிநாட்டுதவி - மானியம் | | | | | | | |
| 16 | எதிர்மறை நிதி | | | | | | | |
| 17 | உள்நாட்டு நிதியுடன் தொடர்பான வெளிநாட்டுதவி | | | | | | | |
| 21 | விஷேட சட்ட சேவைகள் | | | | | | | |
| | மொத்தம் | | | | | | | |

*DGSA 5(i) படிவத்திற்கேற்ப ஒவ்வொரு நிகழ்சித்திட்டத்தின் கீழும் தொகை குறிப்படப்படல் வேண்டும்
** DGSA 1இன் 4ஆம் நிரலில் இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதியேற்பாடு
*** வீதம் தசமம் தவிர குறிப்பிடப்பட வேண்டும்

பிரதானகணக்காளர/பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
திகதி :

# ஒவ்வொரு நிகழ்சித்திட்டத்தின் கருத்திட்டத்திற்கேற்ப செலவினத்தை நிதிப்படுத்துதல்

(நிகழ்ச்சித்திட்டமொன்றின் கருத்திட்டங்கள் மூலம்)

அமைச்சு / திணைக்களம் / மாவட்டச் செயலகம் :

செலவினத் தலைப்பு இல:

நிகழ்ச்சித்திட்ட இலக்கமும் தலைப்பும்:

| நிதிப்படுத்தல். | | நிகழ்ச்சித்திட்டம் 01 | | நிகழ்ச்சித்திட்டம் 02 | | நிகழ்ச்சித்திட்டம் 03 | | நிகழ்ச்சித்திட்டமொத்தம் / பக்க மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| குறியீடு | மூலம் | தேறிய ஏற்பாடு | உண்மைச் செலவினம் | தேறிய ஏற்பாடு | உண்மைச் செலவினம் | தேறிய ஏற்பாடு | உண்மைச் செலவினம் | தேறிய ஏற்பாடு | உண்மைச் செலவினம் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 11 | உள்நாட்டு நிதி | | | | | | | | |
| 12 | வெளிநாட்டுதவி - கடன் | | | | | | | | |
| 13 | வெளிநாட்டுதவி - மானியம் | | | | | | | | |
| 14 | மீள் செலுத்தவேண்டிய வெளிநாட்டுதவி - கடன் | | | | | | | | |
| 15 | மீள் செலுத்தவேண்டிய வெளிநாட்டுதவி - மானியம் | | | | | | | | |
| 16 | எதிர்மறை நிதி | | | | | | | | |
| 17 | உள்நாட்டு நிதியுடன் தொடர்பான வெளிநாட்டுதவி | | | | | | | | |
| 21 | விஷேட சட்ட சேவைகள் | | | | | | | | |
| | மொத்தம் | | | | | | | | |

*ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டத்திற்கும் மேலதிகப் பக்கமொன்று சேர்க்கப்படுமிடத்து கடைசிப் பக்க மொத்தத் தொகை நிகழ்ச்சித்திட்ட மொத்தத் தொகையுடன் சமப்படவேண்டும்.

பிரதானகணக்காளர்/பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)

திகதி :

## மொத்தத் தேறிய ஒதுக்கீட்டுக்கும் உண்மையான மீண்டுவரும் செலவினத்திற்கும் இடையிலான வேறுபாட்டுக்குரிய விளக்கம் (குறியீடு டிஜிஎஸ்ஏ - 3 இன் நிரல் 6க்கு தொடர்புபடுத்தவும்)

அமைச்சு / திணைக்களம் / மாவட்டச் செயலகம் :

செலவினத் தலைப்பு இல:

| நிகழ்ச்சித்திட்ட இல. | கருத்திட்ட இல. | உப-கருத்திட்ட இல. | விடயக் குறியீடு இல. | நிதிப்படுத்தல் (குறியீடு) | மீண்டும் வரும் செலவினத்துக்குரிய விபரம் | சேமிப்புக்கள்/ மிகை ரூபா * | சேமிப்பு வீதம் % ** | விளக்கம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |

* தயவுசெய்து சுற்றுநிருபத்தின் பகுதி 5 இனைப் பார்க்கவும்

**சேமிப்பு வீதம் தசமம் தவிர குறிப்பிடப்பட வேண்டும்

பிரதானகணக்காளர்/பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)

திகதி :

# மொத்தத் தேறிய ஒதுக்கீட்டுக்கும் உண்மையான மூலதனச் செலவீனத்திற்கும் இடையிலான வேறுபாட்டுக்குரிய விளக்கம் (குறியீடு டிஜிஎஸ்ஏ - 4 இன் நிரல் 5க்கு தொடர்புபடுத்தவும்)

அமைச்சு / திணைக்களம் / மாவட்டச் செயலகம் :

செலவினத் தலைப்பு இல:

| நிகழ்ச்சித் திட்ட இல. | கருத்திட்ட இல. | உப-கருத்திட்ட இல. | விடயக் குறியீட்டு இல. | நிதிப்படுத்துதல் (குறியீடு.) | மூலதன செலவின விபரம் | தேறிய சேமிப்புக்கள்/ மிகை ரூபா * | சேமிப்பு வீதம் % ** | விளக்கம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |

(* தயவுசெய்து சுற்றுநிருபத்தின் பகுதி 5 இனைப் பார்க்கவும் )

* சேமிப்பு வீதத்தை தசமமின்றி குறிப்பிடவும்

பிரதானகணக்காளர்/பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)

திகதி :

# நட்டங்கள் மற்றும் இழப்புகள் பற்றிய அறிக்கை

(நட்டங்கள் நி.பி 106 மற்றும் 113 கீழ் உள்ளவை)

செலவினத் தலைப்பு இல: அமைச்சு / திணைக்களம் / மாவட்டச் செயலகம் :

நிகழ்ச்சித்திட்ட இலக்கமும் தலைப்பும்:

(i) இவ்வருடத்திற்கான நட்டங்கள் பற்றிய அறிக்கை, அறவிட்டது \ பதிவழித்தது \ விட்டுவிடப்பட்டது

நிகழ்வுகளின் எண். மொத்தத் தொகை(ரூபா)

குறைவு ரூபா 25,000

கூட ரூபா 25,000

நட்டங்களின் தன்மைக்கேற்ப நிகழ்வுகளின் வகுப்பாக்கம் ரூபா

1

2

3

மொத்தம்

(ii) பதிவழித்தலுக்கு ஷ விட்டுவிடுதலுக்கு எதிர்பார்த்திருக்கும் நட்டங்களைப்பற்றிய அறிக்கை

நிகழ்வுகளின் எண். மொத்தத் தொகை(ரூபா)

குறைவு ரூபா 25,000

கூட ரூபா 25,000

வயதுப் பகுப்பாய்வு

| | | |
|---|---|---|
| ஐந்து வருடங்களுக்கு கீழ் | நிகழ்வுகளின் எண். | |
| | தொகை | ரூபா - |
| 5 - 10 வருடங்கள் | நிகழ்வுகளின் எண். | |
| | தொகை | ரூபா - |
| பத்து வருடங்களுக்கு மேல் | நிகழ்வுகளின் எண். | - |
| | தொகை | ரூபா - |

நட்டங்களின் தன்மைக்கேற்ப நிகழ்வுகளின் வகுப்பாக்கம் ரூபா

1

2

3

மொத்தம்

குறிப்பு:- செலவினத்தலைப்பு 1701 இன் கீழ் ஆண்டினுள் கணக்கு வைக்கப்பட்ட அல்லது ஆண்டினுள் கணக்கு வைப்பதற்கு எதிர்பார்க்கப்படும் நி.பி. 106 இன் கீழான சேதங்கள் மற்றும் நி.பி.113 இன் கீழான கைவிடல் பற்றிய விபரங்களையும் உள்ளடக்குதல் வேண்டும்

பிரதானகண்க்காளர்/பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)

திகதி :

## புத்தகத்திலிருந்து பதிவளித்தல் பற்றிய கூற்று

அமைச்சு / திணைக்களம் / மாவட்டச் செயலகம் :

செலவினத் தலைப்பு இல:

நிகழ்ச்சித்திட்ட இலக்கமும் தலைப்பும்:

1 ஆண்டில் ஏற்ப்பட்ட நட்டத்தின் பெறுமதி

| | | | | நிகழ்வுகளின் எண். | மொத்தத் தொகை(ரூபா) |
|---|---|---|---|---|---|
| (ஊ) | குறைவு | ரூபா | 25,000 | | |
| | கூட | ரூபா | 25,000 | | |

2 ஆண்டில் புத்தகத்திலிருந்து பதிவளித்தல் மற்றும் அறவிடல் பற்றிய கூற்று

| நட்டத்தின் தன்மை | பதிவளிக்கப்படாத ஆரம்ப மீதி | நட்டத்தின் பெறுமதி | அறவிடல் | புத்தகத்திலுருந்து பதிவளித்தல் பெறுமதி | மீதி கீழ் கொண்டு வந்தது பதிவழிககப்படாதது | புத்தகத்திலிருந்து பதிவளிப்பதற்கான அனுமதியின் முன்னளித்தல் இல |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | | |
| 1 | | | | | | |
| 2 | | | | | | |
| 3 | | | | | | |
| 4 | | | | | | |
| 5 | | | | | | |
| மொத்தம் | | | | | | |

குறிப்பு:-டிஜீஎஸ்ஏ 8 இல் உள்ளடக்கப்பட்டுள்ள கணக்கு வைக்க வேண்டிய நட்டம் மற்றும் கைவிடல் தவிர்ந்த நி.பி. 109 இன் கீழான ஏனைய நட்டங்கள் மற்றும் கைவிடல் என்பவற்றினை மாத்திரம் இந்தப்படிவத்தில் உள்ளடக்குதல் வேண்டும்

பிரதானகணக்காளர்/பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)

திகதி :

# பொறுப்புக்கள் பற்றிய அறிக்கை - (i)

(திறைசேரியின் அனுமதியுடன் வைப்புக் கணக்குக்கு மாற்றப்பட்ட ஏற்பாடுகள் தவிர)

அமைச்சு / திணைக்களம் / மாவட்டச் செயலகம் :

செலவினத் தலைப்பு இல:

நிகழ்ச்சித்திட்ட இலக்கமும் தலைப்பும்:

| கடன் கொடுத்தவரின் பெயர் * | பொறுப்பின் விபரம் | பற்றுச்சீட்டு இல./ ந.க.இல. | கருத்திட்ட இல. | உப-கருத்திட்ட இல. | செலவு விடயக் குறியீடு | நிதிப்படுத்தல் குறியீடு | தொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|
| 1.அமைச்சு/அரச திணைககளம் | | | | | | | |
| ........................... | | | | | | | XX |
| ........................... | | | | | | | XX |
| மொத்தம் | | | | | | | |
| 2.அரச கூட்டுத்தாபனம்/நியதிசசட்ட்சபை | | | | | | | |
| ........................... | | | | | | | XX |
| ........................... | | | | | | | XX |
| மொத்தம் | | | | | | | |
| 3.ஏனயவை(தனியார்தறை) | | | | | | | |
| ........................... | | | | | | | XX |
| ........................... | | | | | | | XX |
| மொத்தம் | | | | | | | |
| மொத்த தொகை | | | | | | | |

பிரதானகண்க்காளர்/பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)

திகதி :

# பொறுப்புக்கள் பற்றிய அறிக்கை - (ii)

நி.பி. 215(3)(ஆ) மற்றும் (இ) இற்கு ஏற்ப வைப்புக் கணக்குகளுக்கு மாற்றப்பட்ட ஏற்பாடுகள்

அமைச்சு / திணைக்களம் / மாவட்டச் செயலகம் :

செலவினத் தலைப்பு இல:

நிகழ்ச்சித்திட்ட இலக்கமும் தலைப்பும்:

| கடன் கொடுத்தவரின் பெயர் (வைப்புக் கணக்கிற்கு நிதியேற்பாட்டினை மாற்றும் போது அடையாளம் காணப்படவேண்டும்) | பொறுப்பின் விபரம் | பற்றுச்சீட்டு இல./ ந.க.இல. | வைப்புக் கணக்கிற்கு மாற்றிய நிதியேற்பாட்டின் வாக்குப்பண விபரம் | | | | மாற்றப்பட்ட தொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | கருத்திட்ட இல. | உப-கருத்திட்ட இல. | செலவு விடயக் குறியீடு | நிதிப்படுத்தல் குறியீடு | |
| | | | | | | | |

* கீழ்வருமாறு வெவ்வேறாக நிரல்படுத்த வேணடும்

1. அமைச்சுக்களுக்கும் / அரசாங்க திணைக்களங்களுக்கும்
2. அரச கூட்டுத்தாபனங்கள் / நியதிச் சட்ட சபைகள்
3. தனியார் பகுதி

பிரதானகண்க்காளர்/பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)

திகதி :

# பொறுப்புக்கள் பற்றிய அறிக்கை - (iii)

நி.பி 94 (2) மற்றும் (3) இற்கு ஏற்ப பொறுப்புகள் பற்றிய கூற்று

அமைச்சு / திணைக்களம் / மாவட்டச் செயலகம் :

செலவினத் தலைப்பு இல:

நிகழ்ச்சித்திட்ட இலக்கமும் தலைப்பும்:

| கடன் கொடுத்தவரின் பெயர் * | பொறுப்பின் விபரம் | பற்றுச்சீட்டு இல./ ந.க.இல. | கருத்திட்ட இல. | உப-கருத்திட்ட இல. | செலவு விடயக் குறியீடு | நிதிப்படுத்தல் குறியீடு | தொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|
| 1.அமைச்சு/அரச திணைககளம் | | | | | | | |
| ........................... | | | | | | | XX |
| ........................... | | | | | | | XX |
| மொத்தம் | | | | | | | |
| 2.அரச கூட்டுத்தாபனம்/நியதிசசட்ட | | | | | | | |
| ........................... | | | | | | | XX |
| ........................... | | | | | | | XX |
| மொத்தம் | | | | | | | |
| 3.ஏனயவை(தனியார்தறை) | | | | | | | |
| ........................... | | | | | | | XX |
| ........................... | | | | | | | XX |
| மொத்தம் | | | | | | | |
| மொத்த தொகை | | | | | | | |

பிரதானகணக்காளர்/பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)

திகதி :

## மீளளிப்புச் செய்யக்கூடிய வெளிநாட்டு உதவிகளுக்குரிய உரிமை கோரல் வெளிப்பாடுகள்

அமைச்சு / திணைக்களம் / மாவட்டச் செயலகம் :

நிகழ்ச்சித்திட்ட இலக்கமும் தலைப்பும்:

| | | ரூபா |
|---|---|---|
| 1) | மீளளிப்பு செய்யக்கூடிய வெளிநாட்டின் உதவியின் கீழ் குறைநிரப்பு ஒதுக்கீடுகள் உள்ளிட்ட 2012 மதிப்பீட்டு ஒதுக்கம். | .......... |
| 2) | மேற்கூறப்பட்ட (01) இற்கமைய உரிய 2012ஆம் ஆண்டு மேற்க்கொள்ளப்பட்ட மொத்த செலவினம். | .......... |
| 3) | 2012 ஜனவரி 01 ஆம் திகதியன்று கிடைக்கவுள்ள மீளளிப்புச் செய்யமுடியுமான வெளிநாட்டு உதவிகளுக்குரிய உரிமை கோரல்களின் மொத்தம் | .......... |
| 4) | 2012 அம் ஆண்டின் மேற்க்கொள்ளப்பட்ட மீளளிப்புச் செய்ய முடியுமான வெளிநாட்டு உதவிகளுக்குரிய உரிமை கோரல்களின் மொத்தம் (இருப்பின்) | .......... |
| 5) | 2011ஆம் ஆண்டு தொடர்பில 2012ஆம் ஆண்டின் மேற்க்கொள்ளப்பட்ட மீளளிப்புச் செய்யக் கூடிய வெளிநாட்டு உதவிகளுக்குரிய உரிமை கோரல்களின் மொத்தம். | .......... |
| 6) | 2011 மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளுக்கான உரிமைகள் தொடர்பில் 2012 ஆண்டில் உதவி வழங்கும் நிறுவனங்களினால் சந்தர்ப்பம் வழங்கப்படாத உரிமை கோரல்களின் மொத்தம். | .......... |
| 7) | 2012ஆம் ஆண்டு தொடர்பில் 2012ஆம் ஆண்டில் உதவி வழங்கப்பட்ட நிறுவனங்களினால் இடகளிக்காத உரிமைகளின் மொத்தம் | .......... |
| 8) | 2011மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளுக்கான 2012ஆம் ஆண்டில் கிடைக்கப் பெற்ற மீளளிப்புகளின் மொத்தம் | .......... |
| 9) | 2012ஆம் ஆண்டுக்காக 2012 ஆம் ஆண்டில் கிடைக்கப் பெற்ற மீளளிப்புகளின் மொத்தம் | .......... |
| 10) | 2012 டிசமபர் 31 ஆம் திகதி யன்று கிடைக்கவுள்ள மீளளிப்பு செய்யக்கூடிய வெளிநாட்டு உதவிகளுக்குரிய உரிமை உரிமை கோரல்களின் மொத்தம்{(3+4+5)-(6+7)-(8+9)} | .......... |
| 11) | ஒதுக்கீட்டுக்கணக்கைத் தயாரித்து முடிவடைந்த தினம் வரை 2012ஆம் ஆண்டு தொடர்பில் 2012 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் மேற்க்கொள்ளப்பட்ட மீளளிப்புச் செய்யக்கூடிய வெளிநாட்டு உதவிகளுக்குரிய உரிமை கோரல்களின் மொத்தம் | .......... |
| 12) | ஒதுக்கீட்டுக் கணக்குகளை தயாரித்து முடிவடைந்த தினம் வரை 2012 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு பின்னர் கிடைக்கப் பெற்ற மீளளிப்புகளின் மொத்தம் | .......... |
| 13) | ஒதுக்கீட்டுக் கணக்குகளைத் தயாரித்து சமர்பிக்கப்பட்ட தினம் அன்று கிடைக்கவுள்ள மீளளிப்புச் செய்யக் கூடிய வெளிநாட்டு உதவிகளுக்குரிய உரிமை கோரல்களின் மொத்தம் (10+11-12) | .......... |

# காணாமல் போன உறுதிச் சான்றிதழ்கள் பற்றிய விபரங்கள்

செலவினத் தலைப்பு இல்: அமைச்சு / திணைக்களம் / மாவட்டச் செயலகம் :
நிகழ்ச்சித்திட்ட இலக்கமும் தலைப்பும்:

| திகதி | உறுதிச் சான்றிதழ் இல. | செலுத்துனரின் பெயர் | கொடுப்பனவின் தன்மை | தொகை (ரூபா) |
|---|---|---|---|---|
| | | | | |

பிரதானகணக்காளர்/பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
திகதி :

குறிப்பு - (i)

# நிலையான சொத்துக்களின் அசைவு பற்றிய அறிக்கை - 2012

செலவினத் தலைப்பு இல: அமைச்சு / திணைக்களம் / மாவட்டச் செயலகம் :

| செலவு விடயக் குறியீடும் சொத்துக்களின் வகையும் | சொத்துக்களின் குறியீடும் வகையும் | 2012.01.01 அன்றுள்ளவாறான ஆரம்ப மீதி | ஆண்டிற்கான மேலதிகம்** | ஆண்டின் போது நீக்கம் * | 2012.12.31 அன்றுள்ளவான இறுதி மீதி |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | |
| 2101 வாகனங்கள் | * 5 ............................<br>* 5 ............................<br>* 5 ............................ | | | | |
| 2102 உபகரணமும் | * 4 ............................<br>* 4 ............................<br>* 4 ............................ | | | | |
| 2103 பொறியும் இயந்திர உபகரணங்களும் | * 3 ............................<br>* 3 ............................<br>* 3 ............................ | | | | |
| 2104 கட்டிடமும் நிரமாணமும் | * 1 ............................<br>* 1 ............................<br>* 1 ............................ | | | | |
| 2105 காணியும். காணி அபிவருத்தியும் | * 2 ............................<br>* 2 ............................<br>* 2 ............................ | | | | |

(* 01.01.2004 இன. பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கு மட்டும்)

(** இந்நிரலின் பெறுமதிகளின் கூட்டுத் தொகை வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்கின் இணைப்பு DGSA 4 இல் காட்டப்பட்டுள்ள தொகைக்கு சமமாக இருத்தல் வேண்டும்)

2011.01.01 தினத்தன்று காணப்படும் மீதி 2004-2010 வரையிலான வருடங்களில் கொள்வனவு செய்யப்பட்டதும், அவற்றில் அப்புறப்படுத்தப்பட்டதுமான சொத்துக்களின் பெறுமதி நீக்கியதன் பின்னருமான தேறிய மீதியெனவும அம் மீதி நிலையான சொத்துக்களின் ஏடுகளின் தொகைகளுடன் இணங்குவதாகவும, 2004,2005, 2006, 2007, 2008 ˙, ,2010,2011,2012 ம் ஆண்டுகளில் (தேவையறவையினை வெட்டிவிடவும்) மேற்கொள்ளப்பட்ட வருடாந்த களஞ்சிய கணக்கெடுப்புகளின் போது பௌதிக ரீதியாக இருப்பில் காணப்பட்டதாகவும் இதன் மூலம் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

பிரதானகணக்காளர்.˙பணிப்பாளர்(நிதி).˙ஆணையாளர்(நிதி)

முதலெழுத்துக்களுடன் பெயர்:

திகதி:

# முற்பண மற்றும் வைப்புக் கணக்குகளுக்கான கட்டுப்பாட்டுக் கணக்குகள் பற்றிய பொழிப்பு - 2011

செலவினத் தலைப்பு இல.: அமைச்சு / திணைக்களம் / மாவட்டச் செயலகம் :

| முற்பண/வைப்புக் கணக்கின் பெயர் | கணக்கு இலக்கம் | திணைக்கள புத்தகத்திற் கேற்ப | | | | 2009.12.31 அன்றுள்ளவாறு திறைசேரிக் கணக்கின் மீதி |
|---|---|---|---|---|---|---|
| | | 2009.01.01 அன்றுள்ளவாறு ஆரம்ப மீதி | ஆண்டின் வரவுகள் | ஆண்டின் செலவுகள் | 2009.12.31 அன்றுள்ளவாறு இறுதி மீதி | |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| I. அரச ஊழியர்களுக்கான முற்பணம் | | | | | | |
| II. ஏனைய முற்பணஙக்ள் | | | | | | |
| III. நானாவித முற்பணங்கள் | | | | | | |
| IV. வைப்புக் கணக்குகள் | | | | | | |
| i. பொதுவைப்புக்கள் | | | | | | |
| ii. ஏனைய வைப்புக்கள | | | | | | |

மேற்குறிப்பிட்ட முற்பணக்கணக்குகளில் உள்ள இறுதி மீதிகள் அவற்றுக்குரிய தனித்தனி கணக்குகளுடன் இணக்கம் செய்யப்பட்டுள்ளன எனவும், நி.பி. 506(2) க்கு இணங்க கணக்கிணகக் அறிக்கை கணக்காய்வாளர் அதிபதிக்கு அனுப்பப்பட்டுள்ளது எனவும் இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

*வைப்புக்கணக்கு இலக்கங்களைக் குறிப்பிடும் போது திறைசேரியின் அச்சீட்டுக் குறிப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள முழு கணக்கு இலக்கத்தையும் குறிப்பிடுதல் வேண்( மேலும் செயலற்றுள்ள கணக்குகள் பற்றியும் வெளிப்படுத்துதல் வேண்டும்.

பிரதானகணக்காளர்/பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
முதலெழுத்துக்களுடன் பெயர்:
திகதி:

# கட்டுநித் கணக்கு மீதான பொழிப்பு அறிக்கை - 2012

செலவினத் தலைப்பு இல.: அமைச்சு / திணைக்களம் / மாவட்டச் செயலகம் :

| கணக்கு இல. | திணைக்கள புத்தகத்திற்கு ஏற்ப | | | | 2012.12.31 அன்றுள்ளவாறு திறைசேரிப் புத்தக இறுதி மீதி |
|---|---|---|---|---|---|
| | 2012.01.01 அன்றுள்ளவாறு ஆரம்ப மீதி (ரூபா) | குறித்த வருடத்தின் போது மொத்தப் பற்று | குறித்த வருடத்தின் போது மொத்த வரவு | 2012.12.31 அன்றுள்ளவாறு இறுதி மீதி | |
| | (ரூபா) | (ரூபா) | (ரூபா) | (ரூபா) | (ரூபா) |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| ………………………… | ………………………… | ………………………… | ………………………… | ………………………… | ………………………… |
| ………………………… | ………………………… | ………………………… | ………………………… | ………………………… | ………………………… |
| ………………………… | ………………………… | ………………………… | ………………………… | ………………………… | ………………………… |
| ………………………… | ………………………… | ………………………… | ………………………… | ………………………… | ………………………… |
| ………………………… | ………………………… | ………………………… | ………………………… | ………………………… | ………………………… |
| ………………………… | ………………………… | ………………………… | ………………………… | ………………………… | ………………………… |

1. மேலே 5ற்கும் 6ற்கும் இடையேவுள்ள வித்தியாசத்திற்கான காரணத்தினை தயவுசெய்து குறிப்பிடுக.
   1. திறைசேரிக்கு அனுப்பப்பட்ட, ஆனால் சீர்படுத்தப்படாதது. (31.12.2012 உள்ளவாறான காசுப்புத்தக மீதி) ……………………
   2. ஏனைய காரணங்கள……… ……………………

2. மேலே 5இல் காட்டப்பட்டுள்ள மீதியினை கீழ்வருமாற விபரிக்குக
   1. தீர்க்கப்படாத உப-கட்டுநிதிகள் (முற்பணங்கள்) …………………
   2. மாதாந்தப் பொழிப்பினைத் தயாரிக்கையில் ஏதேனும் தவறுகள் ஏற்பட்டிருப்பின் ……………………

இந்த மீதிகள் அறிக்கையில் ஒப்பமிடும் திகதியாகும் போது தீர்க்கப்பட்டிருப்பின் அது பற்றியும் இல்லையெனில் தீர்க்கப்படாமைக்கான காரணம் என்பவற்றினை குறிப்பிடவும்.

**மேற்கூறிய தகவல்கள் உண்மையென்றும் மெய்மையென்றும் இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.**

பிரதானகணக்காளர்/பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
முதலெழுத்துக்களுடன் பெயர்:
திகதி:

திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் 05.09.2007 ம் திகதியிடப்பட்ட 5/2007 ம் இலக்க சுற்று நிருபத்தின் பகுதி (02) ற்கிணங்க
31.12.2012 ல் உள்ளவாறான இதுவரை மூடப்படாத பழைய வங்கிக் கணக்குகள் மீதான இணக்கக் கூற்றுக்களின் நிலைபர அறிக்கை

அமைச்சு / திணைக்களம் / மாவட்டச் செயலகம் :

செலவினத் தலைப்பு இல. :

| வங்கியின் பெயர் | கணக்கு இல. | 31.12.2012 இல் உள்ளவாறு காசுப் புத்தகப்படி மீதி | 31.12.2012 இல் உள்ளவாறு வங்கி கூற்றுப்படி மீதி | கணக்கு இன்னும் மூடப்படாமைக்கான காரணம் | கணக்கினை மூடுவதற்கு எதிர்பார்க்கும் திகதி | கடைசியாக தயாரிக்கப்பட்ட வங்கிக்கிணக்க மாதம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

மேற் குறிப்பிட்ட தகவல்கள் உண்மையானதுடன் சரியானதெனவும் நான் இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்

பிரதானகணக்காளர்/பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
முதலெழுத்துக்களுடன் பெயர்:
திகதி:

குறிப்பு - (iv) - ஆ

## திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் 05.09.2007 ம் திகதியிடப்பட்ட 5/2007 ம் இலக்க சுற்று நிருபத்தின் பகுதி (i)இற்கிணங்க 31.12.2012 ல் உள்ளவாறான புதிதாக திறக்கப்பட்ட வங்கிக் கணக்குகள் மீதான இணக்கக் கூற்றுக்களின் நிலைபர அறிக்கை

அமைச்சு / திணைக்களம் / மாவட்டச் செயலகம் :

செலவினத் தலைப்பு இல. :

| வங்கியின் பெயர் | கணக்கு இல. | 31.12.2012 இல் உள்ளவாறான வங்கிக்கூற்றின்படி மீதி | 31.12.2012 இல் உள்ளவாறான காசுப் புத்தகத்தின்படி மீதி | 31.12.2012 வரை வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத 6 மாதங்களுக்கு மேற்பட்ட காசோலைகளின் மொத்தப் பெறுமதி | தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் கடைசி மாதம் |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

மேற் குறிப்பிட்ட தகவல்கள் உண்மையானதுடன் சரியானதெனவும் நான் இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்

பிரதானகணக்காளர்/பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
முதலெழுத்துக்களுடன் பெயர்:
திகதி:

## 2012 ஒதுக்கீட்டுக் கணக்கு மீதான கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புக்கள்

அமைச்சு / திணைக்களம் / மாவட்டச் செயலகம் :